# அம்பலாங்கொட நகர சபை

## காலி மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 23 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான அம்பலாங்கொட நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

---------------------------------------------------------------------------------------------------------

2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கான வீதி விளக்குகள் பராமரிப்பு தொடர்பாக இலங்கை மின்சார சபையினால் கிடைக்க வேண்டிய வீதி விளக்குகள் பராமரிப்பு படி தொகையினை கணித்து கடன்பட்டோர்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 5,314,979 இற்கான வைப்புக்களை வகைப்படுத்திக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) காணிகள் உரித்தாக்குவதற்கான நட்ட ஈட்டுத் தொகையை முதலீடு செய்தல் தொடர்பாக முன்னைய ஆண்டின் இறுதி காலாண்டிற்காக கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 41,709 இனை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல், மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஒரே முறையில் கிடைக்கும் வருமானம் ரூபா 259,584 எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 295,584 என காட்டப்பட்டிருந்தமையால் கடன்பட்டோர் மீதி ரூபா 36,000 இனை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு களஞ்சியத்தில் மீதியாக காணப்பட்ட 33 விடயங்களைக் கொண்ட 2247 அலகுகளின் பெறுமதியினை கணித்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ரூபா 152,000 இற்கான நிலையான சொத்து விடயங்கள் 02 மற்றும் பெறுமதியை கணிக்க முடியாத 01 விடயம் என்பன கையிருப்பு என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

03 கணக்கு விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 2,940,228 தொகை வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 43,212,332 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நாளதுவரை பேணப்பட்டுள்ள கடன் பதிவேடு, முற்பணப் பதிவேடு, வைப்புக்கள் பதிவேடு, மீதியின் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் மற்றும் காலப்பகுப்பாய்வு பற்றிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது நகர சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,862,377 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,259,764 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------

2.2.1 வீதவரி

----------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 9,716,670 இற்கான நிலுவை வீதவரி மீதியொன்று காணப்பட்ட போதும் 1988 நகரசபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170(2) இன் பிரகாரம் ஆதனங்களை தடைசெய்யும் நடைமுறையை கடைபிடித்து நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வாடகை மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திர கட்டணம்

-----------------------------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு :ரூபா 2,639,196 இற்கான வாடகை மற்றும் ரூபா 109,852 இற்கான நிலுவை அனுமதிப் பத்திரக் கட்டணம் ஆக மொத்தம் ரூபா 2,749,048 நிலுவை வருமான மீதியொன்று காணப்பட்டிருந்த போதும் 1988 இன் நகரசபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170(அ) 1 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.3 1% அனுமதிப்பத்திரக் கட்டணம்

---------------------------------------------------

நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 164 இன் பிரகாரம் இலங்கை சுற்றுலாத்துறை மேம்படுத்தும் சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் தங்கும் இடங்களுக்காக முன்னைய ஆண்டின் பெறுவனவுகள் மீது 1% அனுமதிப்பத்திரக் கட்டணம் ஒன்று அறவிடப்பட வேண்டும். எனினும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நடத்தப்படும் சுற்றுலாத்துறை சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள், தங்குமிடங்கள் மூன்றில் இருந்து 1% அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

-------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் இருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 370,800 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 29,740,525 இற்கான முத்திரை கட்டணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தது.

2.3 மிகை விதிப்புக்கள்

------------------------------

1988 நகரசபை அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட 02 மிகை விதிப்புக்கள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 3,010 தொகையொன்று அறவிடப்படவேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆதனக் கடன்களுக்காக செலுத்தியிருந்த வட்டியை மீளளிப்பு மேற்கொள்ளாமை

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2005 மார்ச் 31 திகதிய இலக்கம் : 08/2005 கொண்ட பொது நிருவாக சுற்றுநிருபத்தின் பிரிவு 11.5 இன் பிரகாரம் ஆதனங்களுக்கான வங்கி வட்டி வீதம் மற்றும் அலுவலர்களிடம் அறவிடப்படும் 4% வட்டி வீதத்திற்கிடையே ஆன வித்தியாசத்தை அரசினால் பொறுப்பேற்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. சபையின் அலுவலர்கள் பெற்றிருந்த ஆதனக் கடன்கள் தொடர்பாக ரூபா 81,887 இற்கான ஆதனக் கடன் வட்டியினை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2014 ஜூன் 06 திகதி வரை அத்தொகையினை உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து மீளளிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதவியணிக் கடன்

----------------------------

சபையில் கடமையாற்றிய 65 ஊழியர்களிடமிருந்து அறவீடுகள் நிலுவையாக இருந்த கடன் மீதி ரூபா 107,190 தொகை காணப்பட்டதுடன் அவர்களில் 62 நபர்களிடம் ரூபா 97,690 இற்கான கடன் மீதி 2009 ஆண்டிற்கு முன்னர் இருந்து நிலுவையாக காணப்பட்டது. இந்த கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக சபையினால் முறையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) சிதும் செவன காணி ஏலவிற்பனை

-----------------------------------------------------

தல்கஸ்கொடவில் அமைந்துள்ள 4 ஏக்கர், 2 ரூட், 4.50 பர்சஸ் காணி ஒன்று ரோயல் சிட்டி என்ற பேரில் துண்டுகளாக பகிரப்பட்டு அபிவிருத்தி செய்வதற்காக 2008 ஏப்ரல் 04 திகதி சபையினால் நிதிக் கம்பனி ஒன்றிற்கு அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

2009 ஏப்ரல் 17 ஆந் திகதி மற்றும் இலக்கம் 1597/8 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விதிக்கபட்டிருந்த நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சரின் கட்டளையின் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த காணிகளை ஏலவிற்பனவு மேற்கொள்ள முன்னர் இசைவினை பெற்றுக் கொள்ளவேண்டும். எனினும் அவ்வாறு இசைவினை பெற்றுக் கொள்ளாமல் இந்தக் காணியின் 54 காணித் துண்டுகள் ஏலவிற்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இசைவுக் கட்டணம் என சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த ரூபா 27,500 இற்கான வருமானத்தை இழக்க நேரிட்டிருந்தது. அத்துடன் இசைவுச் சான்றிதழ் இன்றி ஏல விற்பனவு செய்யப்பட்டிருந்தமையால் 2014 ஜூன் 05 திகதி வரை அறவிடப்படவேண்டிய தண்டப்பணம் ரூபா 93,000 ஆகும்.

(ஈ) மதிப்பளிக்கப்படாத காசோலைகள்

-------------------------------------------------------

2010 மே 10 திகதி ஆதனங்களை தடைசெய்யும் அலுவலரினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 10,285 இற்கான காசோலை ஒன்று மதிப்பளிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வுத் திகதியாகிய 2014 ஜுன் 06 திகதி வரையும் அத்தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

----------------------------------------------------

பயன்படுத்தப்படாமல் அழிவு நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறித் தொகுதிகளை அகற்றுதல் தொடர்பாக ஜனாதிபதி செயலாளரினால் 2013 ஜுன் 05 திகதி வெளியிட்டிருந்த இலக்கம் PCMD/PR/2013 கொண்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களில் பயன்படுத்தப்படாமல் அழிவு நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறித் தொகுதிகளை 2013 செப்டம்பர் 05 திகதி அளவில் அவற்றுவதற்காக வேலை திட்டம் ஒன்றினை தயாரிக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. சபை வளவில் கூட்டுப் பெறுமதி ரூபா 692,990 இற்கான முச்சில்லுவண்டி ஒன்று, கை டிரக்டர் ஒன்று, டிரையிலர் ஒன்று மற்றும் கப் வண்டி ஒன்று துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது என 2014 ஜுன் 06 திகதி மேற் கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்படடிருந்தன எனினும் அவை தொடர்பாக சுற்று நிருப அறிவுரைகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் சபையின் விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்